# India participates at Strengthening Consensus for Peace – a regional meeting on Afghanistan

---

**ஜூலை**06,2020

அமைதிக்கான வலுப்படுத்தும் ஒருமித்த கருத்தில் இந்திய பங்கேற்கிறது - ஆப்கானிஸ்தான் தொடர்பான பிராந்தியக் கூட்டம்.

ஆப்கானிஸ்தான் தொடர்பான பிராந்திய பங்காளிகளின் கூட்டத்தில் இந்திய பங்கேற்றது - ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய குடியரசு நடத்திய ' அமைதிக்கான ஒருமித்த கருத்தை வலுப்படுத்துதல். கூட்டத்திற்கு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி மேன்மை பொருந்திய டாக்டர் முகமது அஷ்ரப் கானி தலைமை ஏற்றார். கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட 20 நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் பங்கேற்றன. இணைச் செயலாளர் (பிஎஐ) இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

ஆப்கானிஸ்தானுக்கு Covid -19 உதவிகளை வழங்கியதற்காகவும், பிராந்தியத்தில் ஒருங்கிணைந்த முயற்சிகளுக்காக சார்க் தலைவர்களின் கூட்டத்தை நடத்தியதற்காகவும் பிரதமர் மோடிக்கு ஜனாதிபதி திரு. அஷ்ரப் கானி நன்றி தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தான் அமைதி மற்றும் நல்லிணக்க செயல்முறை மற்றும் பிராந்திய பங்காளிகளின் சுயாதீனமான, ஒன்றுபட்ட, ஜனநாயக மற்றும் இறையாண்மை கொண்ட ஆப்கானிஸ்தானுக்கு அதரவு அளிப்பது தொடர்பான பிரச்னைகள் விவாதிக்கப்பட்டன. ஆப்கானிஸ்தானின் மிகப்பெரிய அபிவிருத்தி பங்காளிகளில் ஒருவரான இந்தியா, 3 பில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகமான அர்பணிப்புடன், உள்ளடக்கிய, ஆப்கானிஸ்தான் தலைமையிலான, ஆப்கானிஸ்தானுக்கு சொந்தமான, ஆப்கானிஸ்தான் கட்டுபடுத்தப்பட்ட அமைதி மற்றும் நல்லிணக்க செயல்முறையின் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்தியது.

ஆப்கானிஸ்தானில் அரசியலமைப்பு ஒழுங்கிற்கு இந்தியா ஆதரவு தெரிவித்தது, இது பெண்கள், குழந்தைகள் மற்றும் சிறுபான்மையினர் உட்பட ஆப்கானிய சமூகத்தின் அனைத்து பிரிவுகளின் நலனையும் பாதுகாக்கும். ஆப்கானிஸ்தானில் நீடித்த அமைதியை அடைவதற்கு,

பயங்கரவாத சரணாலயங்கள் மற்றும் பாதுகாப்பான புகலிடங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பது அவசியமான முன்நிபந்தனை என்ற உண்மையை இந்தியா எடுத்துரைத்தது.

**ஜூலை 06, 2020**

**புது டெல்லி**

DISCLAIMER : This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.